## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 10-8 - திருமாலிருஞ்சோலை[1]

**(தம்மிடத்து எம்பெருமான் இப்போது மிக விருப்பம் செய்வது கண்ட ஆழ்வார் முன்பு தம்மை அகல்வித்து இப்போது இப்படி இருத்தற்குக் காரணம் வினவி, கூற மாட்டாது நிற்கும் அவனது திறத்தை வியப்புற்று பேசுதல்)**

3744 * திருமாலிருஞ்சோலை மலை * என்றேன் என்ன *
திருமால் வந்து * என் நெஞ்சு நிறையப் புகுந்தான் **
குருமாமணி உந்து புனல் * பொன்னித் தென்பால் *
திருமால் சென்று சேர்விடம் * தென் திருப்பேரே 1

3745 பேரே உறைகின்ற பிரான் * இன்று வந்து *
பேரேன் என்று * என் நெஞ்சு நிறையப் புகுந்தான் **
காரேழ் கடலேழ் * மலையேழ் உலகுண்டும் *
ஆரா வயிற்றானை * அடங்கப் பிடித்தேனே 2

3746 பிடித்தேன் பிறவி கெடுத்தேன் * பிணி சாரேன் *
மடித்தேன் மனை வாழ்க்கையுள் * நிற்பதோர் மாயையை **
கொடிக் கோபுர மாடங்கள் சூழ் * திருப்பேரான் *
அடிச் சேர்வது எனக்கு * எளிதாயினவாறே 3

3747 எளிதாயினவாறென்று * என் கண்கள் களிப்ப *
களிதாகிய சிந்தையனாய்க் * களிக்கின்றேன் **
கிளி தாவிய சோலைகள் சூழ் * திருப்பேரான் *
தெளிதாகிய * சேண் விசும்பு தருவானே 4

3748 வானே தருவான் * எனக்கா என்னோடு ஒட்டி *
ஊனேய் குரம்பை * இதனுள் புகுந்து ** இன்று
தானே தடுமாற்ற * வினைகள் தவிர்த்தான் *
தேனேய் பொழில் * தென் திருப்பேர் நகரானே 5

3749 திருப்பேர் நகரான் * திருமாலிருஞ்சோலை *
பொருப்பே உறைகின்ற பிரான் * இன்று வந்து **
இருப்பேன் என்று * என் நெஞ்சு நிறையப் புகுந்தான் *
விருப்பே பெற்று * அமுதம் உண்டு களித்தேனே 6

3750 உண்டு களித்தேற்கு * உம்பர் என் குறை? * மேலைத்
தொண்டு களித்து * அந்தி தொழும் சொல்லுப் பெற்றேன் **
வண்டு களிக்கும் பொழில் சூழ் * திருப்பேரான் *
கண்டு களிப்பக் * கண்ணுள் நின்றகலானே 7

---

[1] இது சில தேசங்களில் கோவில் திருவாய்மொழி

3751 கண்ணுள் நின்றகலான் * கருத்தின் கண் பெரியன் *
எண்ணில் நுண்பொருள் * ஏழிசையின் சுவை தானே **
வண்ண நன்மணி மாடங்கள் சூழ் * திருப்பேரான் *
திண்ணம் என் மனத்துப் * புகுந்தான் செறிந்து இன்றே 8

3752 இன்று என்னைப் பொருளாக்கித் * தன்னை என்னுள் வைத்தான் *
அன்று என்னைப் புறம் போகப் * புணர்த்தது என் செய்வான்? **
குன்று என்னத் திகழ் மாடங்கள் சூழ் * திருப்பேரான் *
ஒன்று எனக்கருள் செய்ய * உணர்த்தல் உற்றேனே 9

3753 * உற்றேன் உகந்து பணி செய்து * உன பாதம்
பெற்றேன் * ஈதே இன்னம் * வேண்டுவது எந்தாய்! **
கற்றார் மறை வாணர்கள் வாழ் * திருப்பேராற்கு *
அற்றார் அடியார் தமக்கு * அல்லல் நில்லாவே 10

3754 * நில்லா அல்லல் * நீள் வயல் சூழ் திருப்பேர் மேல் *
நல்லார் பலர் வாழ் * குருகூர்ச் சடகோபன் **
சொல்லார் தமிழ் * ஆயிரத்துள் இவை பத்தும்
வல்லார் * தொண்டர் ஆள்வது * சூழ் பொன் விசும்பே 11

**அடிவரவு:** திருமால் பேரே பிடித்தேன் எளிது வானே திரு உண்டு
கண்ணுள் இன்று உற்றேன் நில்லா சூழ்விசும்பு